# இயேசு சாத்தானை விட வலிமை வாய்ந்தவர்;அவர் சாத்தானின் பிடியில் இருந்து மக்களை விடுவிக்கிறார்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் D2b யை வாசிக்கவும்.

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, நீர் வானத்தில் இருந்து பூமியை அரசாளுகிறீர். எங்கள் சமுதாயத்தில் இருந்து உம்மிடத்தில் திரும்பும் யாவரையும் நீர் பொல்லாத ஆவிகளிடம் இருந்து விடுவித்து உமது அன்பையும் வல்லமையையும் காட்டுவீராக."

மக்களின் தேவைக்கு ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளவும்.


1. **பிசாசுகள் பிடித்த மக்களை இயேசுவின் நாமத்தினால் விடுவிக்க ஜெபத்தோடும் வார்த்தையோடும் உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.**

**குறிப்பு:** ஒரு மனிதனை சாத்தான் ஒடுக்கும்போது அந்த மனிதனுக்குள் பிசாசு அல்லது தீய ஆவி அல்லது அசுத்த ஆவி இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. உடல் ரீதியான நோயையும் ஆவிக்குரிய ஒடுக்குதலையும் இயேசுவால் குணப்படுத்த முடியும். ஒரு பிசாசால் ஒரு மனிதனை ஒடுக்கி அவனை விநோதமான முறையில் நடந்து கொள்ளும்படி செய்யலாம். ஒரு மனிதனைப் பிசாசு, தன்வசப்படுத்திக் கொள்ளும் என்றோ, ஒருவனுடைய ஆத்துமாவை சொந்தமாக்கிக் கொள்ளும் என்றோ வேதாகமம் கூறவில்லை (சரியான மொழி பெயர்ப்பின் படி).

மக்களைப் பிசாசிடம் இருந்து **எவ்வாறு விடுவிப்பது** என்று இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் காட்டினார். ஒரு புறஜாதிப் பெண்ணை பிசாசின் பிடியில் இருந்து இயேசு எவ்வாறு விடுவித்தார் என்பதை **மத்தேயு 15:22-28** ல் காண்க.



- தன்னுடைய மகளின் சார்பாக யார் இயேசுவிடம் உதவி கோரியது? (22).
- அந்த சிறுமிக்குப் பிசாசு செய்தது என்ன?
- இயேசுவின் சீஷர்கள் அந்தப் பெண்ணுக்கு என்ன செய்ய வேண்டும் என்று முயற்சி செய்தனர்? (23).
- அந்தப் பெண் நீதியானவளா? உதவிக்குப் பாத்திரமானவளா? (23-27).
- அந்தத் தாயிடம் இருந்த எந்த குணத்தை இயேசு பாராட்டினார்? (25)
- அந்தப் பெண்ணுக்கு எதைப் பற்றி இயேசு உறுதி அளித்தார்?
- சிறுமி குணமாவதற்கு எவ்வளவு நேரம் பிடித்தது?



ஒரு யூத சிறுவனை பிசாசின் பிடியில் இருந்து இயேசு எவ்வாறு விடுவித்தார், என்பதை **மத்தேயு 17:14-21** ல் காண்க.

- தன் மகனுடைய சார்பில் யார் இயேசுவிடம் உதவி கேட்டது? (14).
- அந்த சிறுவனுக்கு பிசாசு செய்து கொண்டு இருந்த காரியங்கள் எவை? (15)
- எத்தகைய மக்கள் பிசாசினால் மிகவும் அவதிப்படுவார்கள்? (17)
- அந்த பிசாசிடம் என்ன கூறினார்? என்ன செய்தார்? (17, 18)
- இயேசுவின் சீஷர்களால் பிசாசை ஏன் துரத்த முடியவில்லை? (20)
- தீய ஆவிகளை விரட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? (21)

சாத்தானின் மேல் உள்ள அதிகாரத்தைப் பற்றி இயேசுவின் சீஷர்கள் அறிந்து கொண்டதை **லூக். 10:17-20** ல் காண்க.

- எந்த அதிகாரத்தினால் சீஷர்களால் மக்களை பிசாசுகளின் பிடியில் இருந்து விடுவிக்க முடியும்?(17).
- தமது சீஷர்களுக்கு உள்ள அதிகாரத்தை இயேசு எவ்வாறு விவரித்தார்? (19).
- விசுவாசிக்கும் சீஷர்களா? தீய ஆவிகளா? யார் வலிமையானவர்கள்? (20)
- ஆவிகளுக்கு மேல் இருக்கும் அதிகாரத்தை விடவும் விசுவாசிகளை அதிகமாக சந்தோஷப்படவைக்கும் சத்தியம் எது?

இயேசுவின் அப்போஸ்தலர்கள் மக்களைப் பிசாசுகளிடம் இருந்து விடுவித்தனர்.

அப்போஸ்தலர்களாகிய பவுலும் சீலாவும் ஒரு சிறுமியிடம் இருந்த ஆவியை எவ்வாறு விரட்டினர் என்பதை **அப். 16:16-19**ல் காண்க.

- அந்த சிறுமியை ஒடுக்கியது எவ்வகையான ஆவி? (16)
- பிசாசு பிடித்திருந்தப் பெண்ணை பிறர் எவ்விதம் தங்களுக்கு லாபமாக பயன்படுத்தினர்?
- பவுலும் அவரது உடன் ஊழியர்களும் யார் என்பதைப் பிசாசு அறிந்திருந்ததா?(17)
- பவுல் அந்த ஆவியை எவ்வாறு துரத்தினார்? (18)
- எவ்வளவு சீக்கிரமாக அது அப்பெண்ணை விட்டு நீங்கிற்று? (18).
- அந்தப் பெண்ணின் எஜமானர்கள் என்ன செய்தனர்? (19-21)





**அப். 19** ... வாறு ஒரு சமுதாயத ... ன்பதைக் காண்க.

- ஆவிக ... அதிகாரம் இருந்த ...
- அவிசுவ ... யோகிக்க முயன்ற ...
- பிசாசுகளை விரட்ட நாம் எந்த நாமத்தை பிரயோகிக்க வேண்டும்? (17)
- ஆவிகளிடம் இருந்து விடுதலை பெற்ற மக்கள் தங்கள் மாய வித்தைகளையும் மந்திரப் பொருட்களையும் என்ன செய்ய வேண்டும்? (18-19)
- ஆவிகளிடம் இருந்து மக்களை விடுவிக்கும் இடங்களில் எல்லாம் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டிய செய்தி என்ன? (20)

**2. அடுத்த வார காரியங்களுக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசிக்கவும்**

- உங்கள் சமுதாயத்தில் மக்களைத் துன்புறுத்தும் ஆவிகளின் வகை பற்றி விவாதிக்கவும்.
- பிசாசு பிடித்தவர்களுக்காக ஜெபித்து விடுதலை செய்யும் படியாக கர்த்தர் வழிநடத்தும் ஒருவரை உங்கள் உடன் ஊழியர்களிடமோ, விசுவாசிகளிடமோ இனம் காணுங்கள்.
- பிசாசுகளின் பிடியில் இருந்து விடுதலை ஆகும் படி ஜெபிக்கப்பட வேண்டிய மக்களிடம் தேவன் வழி நடத்துவதற்காக சேர்ந்து ஜெபிக்கவும்.
- பிசாசிகளின் பிடியில் இருந்து மக்களை விடுவிப்பத்தில் அனுபவம் பெற்ற கிறிஸ்தவ ஊழியர் ஒருவரை சந்தித்து இது குறித்து கேட்க அவரிடம் அனுமதி பெறவும்.

- விடுதலைக்காக ஜெபிக்கப் போகும் மக்களிடம் இயேசுவவைப் பற்றிய நற்செய்தியை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்று ஆயத்தப்படவும்.
- பிசாசுகளை துரத்துவதை ஒரு பொது காட்சியாக வைக்கக் கூடாது என்பதிலும், ஆனால் இயேசுவைப் பற்றி பொது மக்களிடம் அறிவிப்பது என்பதிலும், யாருக்காவது தேவைப்பட்டால் மட்டுமே பிசாசுகளை துரத்துவது என்பதிலும் ஒருமனமாக முடிவு எடுக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

பிசாசுகளின் பிடியில் இருந்து இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் மக்களை விடுவித்த கதைகளைப் பற்றி **வாசிக்கவும் அல்லது மனப்பாடமாகக் கூறவும்.** பகுதி 1 லிருந்து கதைகளைக் கூறுவீர்களேயானால் அதே கேள்விகளையும் கேட்கவும்.

பிசாசுகளின் பிடியில் இருந்து விடுபட்ட மக்களைப் பற்றி **விசுவாசிகள் கூறலாம்.**

பிசாசு பிடித்தலைப் பற்றிய பல உண்மைகளை **விவரிக்கவும்.**

- பெரும்பாலான நோய்கள் தேவனால் அனுமதிக்கப்படுகின்றனவே ஒழிய அவை பேய்கள் அல்லது பிசாசுகளினால் வருவதில்லை.
- மக்களின் பாவ நடத்தைகள் இருதயத்தில் இருந்து வருகின்றனவே தவிர பேய்களால் அல்ல.
- தேவனை விடவும் தங்களுக்கு அதிகமான வல்லமை இருப்பதாக சாத்தானும் பேய்களும் மக்களை ஏமாற்றுகின்றன.
- பிசாசு பிடித்தவர்களை விடுதலை செய்யும்படியாக ஜெபிக்கும் அதிகாரம் எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு.
- சுவிசேஷத்தைப் போதிக்கும் போது பிசாசுகள் தடை உண்டாக்கினால் அகன்று போகுமாறு அவைகளுக்கு நாம் கட்டளை இட வேண்டும்.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்ததை வழங்கட்டும்.

யோவான் 13:21-27 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தவும்.

மிகவும் பரிசுத்தமான கடைசி இராப்போஜனத்தில் யூதாஸ் வஞ்சகமாகக் கலந்து கொண்டு இயேசுவோடு கூட அப்பம் பிட்டான். அதன் பின் சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து, திட்டங்கள் தீட்டி, ஒருவரை ஒருவர் ஊக்குவித்து ஜெபிக்கவும்.

மத்தேயு 8:16 ஐ **மனப்பாடம் செய்க.**

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net